செய்தி வெளியீடு **நாள்: 11.09.2025**

கொளத்தூர் வண்ணமீன்கள் வர்த்தக மையம் அடுத்த மாதம் (அக்டோபர்) முதல் வாரம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் மக்கள் யன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும்.

முல்லை நகர், கவியரசு கண்ணதாசன் நகர் மற்றும் தண்டையார்பேட்டை பேருந்து நிலையம் அடுத்த மாதம் (அக்டோபர்) இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும்.

அம்பத்தூர் பேருந்து நிலையம் இந்த மாதம் (செப்டம்பர்) இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும்.

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (11.09.2025) சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி நகரில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் "**கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையம்**" மற்றும் பெரியார் நகர் நூலகத்தில் கட்டப்பட்டு வரும் '**முதல்வர் படைப்பகம்**' கட்டிடத்தின் முன்னேற்ற பணிகளை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

மாண்புமிகு திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகன் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து தென் சென்னைக்கு நிகராக வடசென்னையை மிளிரூ டச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை தன் சிந்தனையில் உருவாக்கி அதை பயன்பாட்டிற்கு கொண்டு வந்து மக்களுடைய நலன் பேணுகின்ற ஒரு அரசாக இந்த திராவிட மாடல அரசு வடசென்னை வளர்ச்சி திட்டத்தை கையில் எடுத்திருக்கின்றது.

அதன் ஒரு பகுதியாக பார்ப்பவர்கள் மட்டுமல்லாமல் அயல் நாட்டிற்கு வந்திருக்கின்றோமோ என்று எண்ணுகின்ற வகையில் நம்முடைய திரு.வி.க நகர் பேருந்து நிலையத்தை வடிவமைத்து காட்டி இருக்கின்றோம். அதன் தொடர்ச்சியாக 282 பணிகள் ஒட்டுமொத்த சென்னையில், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய உத்தரவிற்கு ஏற்ப பணிகளை எடுத்து அந்த பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதில் பூங்காக்கள், உடற்பயிற்சி கூடங்கள், மருத்துவமனைகள், கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள், பேருந்து நிலையங்கள், வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் பல்வேறு புதிய குடியிருப்புகள், வணிக வளாகங்கள் என திட்டமிட்டு 282 பணிகளை மேற்கொண்டு அதில் கிட்டத்தட்ட 25க்கும் மேற்பட்ட பணிகள் முடிவுற்று மக்கள் பயன்பாட்டிற்கு **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால்** அவர்களுடைய பொற்காலங்களால் ஒப்படைக்கப்பட்டுள்ளது, அதில் ஒரு பகுதியாக இன்றைக்கு

வண்ண மீன்கள் வர்த்தக மையம் பெருமளவு வெளிநாட்டின் பொருளாதாரத்தை ஈர்க்கின்ற பெரிய வியாபாரமாக அவை உருவாகியுள்ளது.

கொளத்தூரில் சாலை ஓரங்களிலும் சிறு சிறு கடைகளில் வண்ண மீன் வியாபாரம் உற்பத்தியாளர்கள் மற்றும் வண்ண மீன் சார்ந்த தொழிலாளர்கள் நலன் பேணுகின்ற வகையில் **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள் 2016 ஆம் ஆண்டு வாக்குறுதி அளித்தார். கடந்த ஆட்சி காலத்தில் அந்த வாக்குறுதியை நிறைவேற்ற சொல்லி சட்டமன்றத்தில் மூன்று முறை கேள்வி கேட்டும் கூட அதற்குண்டான பணிகள் தொடங்கவில்லை.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சொன்னதை செய்கின்றவர், செய்வதை தான் சொல்கின்றவர், அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இன்றைக்கு இந்த இடத்திலேயே ஒரு லட்சத்து 25 ஆயிரம் சதுர அடியில் வண்ண மீன்கள் வர்த்தக மையம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதில் சுமார் 200 எண்ணிக்கையிலான 4 சக்கர வாகனங்கள், 200 எண்ணிக்கையிலான இருசக்கர வாகனங்கள், பார்க்கிங் வசதியோடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு மீன் காட்சியகங்களும் இதில் அடங்கும், உணவகங்கள் 3 என்று ஒட்டுமொத்தமாக கிட்டத்தட்ட 188 கடைகள் இதில் அமைய இருக்கின்றது.

இதுபோன்ற ஒரு வர்த்தக மையம் அரசின் சார்பில் முதல்முறையாக சென்னையிலே அமைக்கப்படுகிறது என்பதை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். இதற்கெல்லாம் உரிய புகழ் எங்களுடைய **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களை சாரும். இந்த வர்த்தக மையத்தை பொறுத்தளவில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வடிவமைக்கப்பட்டு இருந்தாலும், இந்த பணிகளுடைய முன்னேற்றத்திற்காக பெருமளவு பேருதவியாக இருக்கின்ற, தொடர்ந்து இந்த ஆய்விலேயே பங்கேற்கின்ற மாநகரத்தினுடைய மாண்புமிகு மேயர் பிரியா அவர்களும் அதேபோல் எங்கள் துறையினுடைய செயலாளர் திருமதி. காக்கர்லா உஷா அவர்களும், சென்னை பெருநகரத்தின் உடைய ஆணையாளர் திரு.குமரகுருபரன் அவர்களும், சிஎம்டிஏ உறுப்பினர் செயலாளர் திரு.பிரகாஷ் அவர்களும், சிஎம்டிஏ சிஇஓ திரு.சிவஞானம் அவர்களும், மீன்வளத் துறையின் ஆணையாளர் திரு.முரளிதரன் அவர்களும், மீன்வளத் துறையின் செயலாளர் டாக்டர் சுப்பையன் அவர்களும் மற்றும் இந்த பகுதியினுடைய மண்டல குழுத்தலைவர் அவர்களும் பேருதவியாக இருப்பதற்கு துறையினுடைய அமைச்சர் என்கின்ற முறையில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களின் சார்பில் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறோம்.

கொளத்தூர் வண்ணமீன் வர்த்தக மையம் மக்கள் பயன்பாட்டிற்கு அடுத்த மாதம் (அக்டோபர்) முதல் வாரத்தில் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின்** திருக்கரங்களால் வண்ணமீன் உற்பத்தியாளர்களுக்கு அர்ப்பணிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல் கட்டமாக திரு.விக.நகர் பேருந்து நிலையத்தை மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்துள்ளார், பெரியார் நகர் பேருந்து நிலையத்தை மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்துள்ளார். கூடிய விரைவில் அம்பத்தூர் பேருந்து நிலையத்தை மக்கள் பயன்பாட்டிற்கு அளிக்க இருக்கின்றார்.

முல்லை நகர், கவியரசு கண்ணதாசன் நகர், தண்டையார் பேட்டை (ஆர்.கே.நகர்) பேருந்து நிலையம் மற்றும் முதலில் போக்குவரத்து கழகம் தொடங்கியபொழுது கட்டப்பட்ட முதல் பேருந்து நிலையமான தண்டையார் பேட்டை (ஆர்.கே.நகர்) பேருந்து நிலையத்தையும் அடுத்த மாதம் (அக்டோபர்) இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும். **மாண்புமிகு தமிழக முதல்வர்** நினைவிலே இருக்கின்ற, வாழும் கலைஞர் அவர்கள் போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த பொழுது திறந்து வைக்கப்பட்ட பேருந்து நிலையமான அம்பத்தூர் பேருந்து நிலையமும் இந்த மாதம் (செப்டம்பர்) இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு

Verified RedEstore

அர்ப்பணிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். **இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வுகளின்போது **மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா**, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., சிஎம்டிஏ முதன்மை செயல் அலுவலர் திரு.சிவஞானம், இ.ஆ.ப., மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் திரு.க.வீ.முரளிதரன், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திரு.கூ.பீ.ஜெயின், சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, **மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி.மு.இந்துமதி**, **டாக்டர் பால்பிரின்ஸ்லி ராஜ்குமார்**, கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.பாலமுருகன், திரு.ராஜன்பாபு, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் திரு.ஜசிஎப்.முரளிதரன், திரு.சந்துரு, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.ராஜேஸ்வரி ஸ்ரீதர், திரு.டி.வி.செம்மொழி, திரு.நாகராஜன், திருமதி.அமுதா மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate